யோகாஸன ஆலய விஜயம்

மலர் 31	பிங்கள ஆண்டு பங்குனித் திங்கள் March—1978	இதழ் 3

அஞ்சும் அடக்கடக் கென்பர் அறிவிலார்
அஞ்சும் அடக்கும் அமரரும் அங்கிலை
அஞ்சும் அடக்கில் அசேதன மாமென்றிட்டு
அஞ்சும் அடக்கா அறிவறிந் தேனே.

புலனடக்கம் என்பது தீய நெறியிற் செலுத்தாது தூய நெறியில் செலுத்துவதேயாகும். இவ்வுண்மை தெளியாதோர் பொறி புலன்களைச் செயலற செய்தலே அடக்குதல் என்பார் அவர்கள் அறிவற்றவர். தேவருலகிலும் இறைவனை வழிபடும் பணியை மேற் கொண்டிருப்பர். ஆதலால் ஐந்தையும் அடக்கியோர் அங்கும் இல்லை. அடக்கிடில் உயிரானது அறிவற்ற கல்லாகிய அசேதனமாம். எனவே ஐந்தையும் அடக்காமல் அடக்கி அறிவு வழியில் திருப்பும் அறிவை அறிந்தேன் !

—திருமூலர்.

சந்தா விபரம்	உள்நாடு	சிலோன்	வெளிநாடு (கப்பல்)	விமானம்
ஆண்டு சந்தா	ரூ. 4—00	ரூ. 6—00	ரூ. 15—00	ரூ. 30—00
ஆயுள் சந்தா	ரூ. 50—00	ரூ. 80—00	ரூ. 150—00	ரூ. 300—00
தனிப்பிரதி	40 காசு	50 காசு	ரூ. 1—25	ரூ. 2—00

உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் பொன்மொழி

அருளே ஆதாரம்!

சீவர்களின் வினைவழியே இன்ப துன்பங்கள் தொடர்கின்றன. இவ்வுண்மையுணர்ந்தோர் இவ்விரண்டிற்கும் ஆட்படாமல் இறையருளே நாடுவர்!

திருமதி சாவித்திரி செல்வராஜன்.

பௌர்ணமி வகுப்பு

22—4—78 சனிக்கிழமை இரவு 7 மணிக்குக் கீழ்க்காணும் இடங்களில் வகுப்பு நடைபெறும்:

1, யோகாசன ஆலயம்: 16-A. வன்னியர் முதல் தெரு, சூளைமேடு சென்னை-600 094.

2. அருள்மிகு மன்னுர்சாமி கோவில்: மன்னுர்சாமி கோவில் தெரு, இராயபுரம், சென்னை-600 013.

3. சுந்தர விநாயகர் கோவில்: சின்னநத்தம், செங்கல்பட்டு.

வேள்விப் பயிற்சி வகுப்பு

ஷை யோகாசன ஆலயத்தில் 9—4—78 அன்றும், சென்னை புரசைப்பாக்கம், செல்லப்ப கிராமணி தெரு, எண் 13, இல்லத்தில் 23—4—78 அன்றும் காலை 10 மணிக்கு வகுப்புகள் நடைபெறும். யாவரும் கலந்துகொள்க!

மகளிர் பிரிவு வேதாந்த வகுப்பு

பிரதி திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு சென்னை வண்ணையம்பதி சிங்காரத்தோட்டம் 7வது தெரு, அருள்மிகு சேணியம்மன் கோவிலில் மகரிஷி தாயுமானவர் திருப்பாடலுககு வேதாந்த விளக்கவுரை நடைபெறுகிறது. யாவரும் கலந்து அறிவு விளக்கம் பெறுக!

யோகாசன ஆலய விஜயத்திற்கு 1978ஆம் ஆண்டின் சந்தா செலுத்தி விட்டீர்களா?

ஒவ்வொருவரும் மேலும் சந்தாதாரரைச் சேர்த்து அன்பர்பணி புரிவீர்!

அனுப்பவேண்டிய முகவரி:

C. இராமசாமி,
9/4, கிருஷ்ணபுரம்,
சூளைமேடு, சென்னை-600 094.

மகரிஷி தாயுமானவர்

தன்னையொருவர்
திரு. கோ. மு. சுவாமி அவர்கள்
நிகழ்த்திய உரை விளக்கம்.

ஆரா வமிர்தம் விரும்பினர்க
ளறிய விடத்தை யமிர்தாக்கும்
பேரா னந்தச் சித்தனெனும்
பெரியோய் ! ஆவிக் குரியோய்! கேள்!
காரார் கிரக வலையினிடைக்
கட்டுண் டிருந்த களைகளெல்லாம்
ஊரா லொருநாள் கையுணவேற்
றுண்டா லெனக்கிங் கொழிந்திடுமே.

பதவுரை

ஆரா - தெவிட்டாத, அமிர்தம் - அமுதத்தினை, விரும்பினர்கள் - விரும்பினவர்களாகிய (தேவர்கள்), அறிய - (தேவரீர் மகிமையினை) அறியும்படி, விடத்தினை - நஞ்சினை, அமிர்து ஆக்கும் - அமுதமாக்கிய, பேரானந்த சித்தன் என்னும் - பேரானந்த சித்தன் என்கிற, பெரியோய் ! - உரியவனே !, கேள், - கேட்பாயாக !, கார் ஆர் - கருமை தங்கிய, கிரக வலையினிடை - சமுசாரவலையில், கட்டுண்டு இருந்த - கட்டுப்பட்டிருந்த, களைகள் எல்லாம் - விடாய்க ளெல்லாம், ஊரால் - ஊர்தோறும், ஒரு நாள்-ஒவ்வொரு நாளாக, கை உணவு-கைப்பிச்சை, ஏற்று உண்டால்-வாங்கியுண்பேனுயின், இங்கு-இவ்விடத்து, எனக்கு-அடியேனுக்கு, ஒழிந்திடும் - ஒழிந்துபோம், என்க.

கருத்துரை

சுவாமிகள் முன்பாடலில், உலகப் பொருள்களே உண்மை என்ற அறியாமையாகிய இருளில் மூழ்கிக் கிடக்கும் என்னுள்ளத்தில் ஒளியைப் பெருகச் செய்வது என்றோ ? என பரம்பொருளை இறைஞ்சினுர். இப் பாடலில், தெவிட்டாத அமுதத்தினைப் பெற விரும்பிய தேவர்கள்

அறியுமாறு கொடிய விடத்தினை அமுதமாகப் பருகிய எல்லாம் வல்ல சித்தரான பெருமானே! குடும்பம் எனும் வலையினுள் அகப்பட்டிருக்கும் என் ஆசைகளெல்லாம் ஊர்தோறும் சென்று ஒவ்வொரு நாளும் கைப்பிச்சை வாங்கி உண்பேனாயின் ஒழிந்து போகும் அல்லவா? எனக் கேட்கின்றார்.

விரிவுரை

இன்பத்தை விரும்பாத உயிர்கள் இல்லை எனலாம். அதிலும் தெவிட்டாத இன்பமெனில்! பெரிதும் முயன்று பெற விழைவர். அங்ஙனமே விரும்பிப் பெற முயன்றனர் தேவர்கள். வாசுகி யெனும் பாம்பைக் கயிருகக்கொண்டு மந்தரமலையை மத்தாக்கித் திருப்பாற்கடலைக் கடைந்தனர். ஒருபுறம் தேவர்கள் மறுபுறம் அசுரர்கள் இருபாலாரும் அமுதத்தைப் பருக ஆவல்கொண்டர். பாம்பு விஷத்தைக் கக்கியது! சிவபெருமான் அதைத் தாமே அருந்தினார்; உமையவள் கண்டத்தைப் பிடித்தாள்; கண்டம் திருநீலகண்டமாகியது. இது புராண வரலாறு. இக் கதையின் விரிவை யோகாசன ஆலய விஜயம் மலர் 29. இதழ் 9-ல் காண்க!

இக்கதை அனுபவத்திற்குப் பொருந்துவதைக் காண்போம். மனதை குரு நிலைப்படுத்தி இருமொழியாம் ஒருமொழியினை நாட்டி உணர்வு என்பதைத் திரட்டுவதே யோகியர், ஞானியர், அல்லது சாதகரின் செயல். இவர்களுக்கு அறிவில் ஆனந்தமெனும் அமுதம் உற்பத்தியாகி அவ்வானந்தத்திலேயே திளைத்திருப்பர்! இவர்களுக்கே இறப்பில்லை. புராணத்தில் கூறியவாறு விடமுண்ட கண்டனை சிவ பெருமானை முன்னிலைப் படுத்தித் தாயுமான அடிகளார், "ஆரா அமிர்தம் விரும்பினர்கள் அறிய விடத்தை அமிர்தாக்கும் பேரானந்தச் சித்தன்" என்றனர்.

பரம்பொருளின் செயல் நம்முடைய மனோவாக்குக்கு எட்டாதது. வித்தைக்காரன் ஒருவன் கோழிமுட்டைகளை ஒன்றன்மீது ஒன்ருக அடுக்கி எல்லோரையும் வியக்கச் செய்கிறான். ஆனால் பரம் பொருளோ? அண்டங்கள் பலவற்றைத் தன் அருள்வெளியில் வைத்து அற்புதத்தைச் செய்திருக்கிறான்! இதனைத் தாயுமானவர்,

மண்டலத்தின் மிசை ஒருவன் செய்தவித்தை.
அகோ எனவும் வாரணுதி
அண்டமவை அடுக்கடுக்காய் அந்தரத்தில் நிறுத்தும் அவ
தானம் போல
எண்டருநல் அகிலாண்ட கோடியைத்தன் அருள்வெளியில்
இலக வைத்துக்
கொண்டுநின்ற அற்புதத்தை எவராலும் நிச்சயிக்கக்
கூடா ஒன்றை

எனக் குறிப்பிடுகின்றார். திருவிளையாடல் புராணத்தில், எல்லாம் வல்ல சித்தரான படலத்தில் அவர் செய்யும் அற்புதங்களைக் காணலாம்! சீவர்களை உரிமையாக உடையவனும், யாவற்றிற்கும், பெரியோனும் ஆகையினால் சுவாமிகள், "பெரியோய் ஆவிக்குரியோய் கேள்!" என்று இறைவனை விளித்துத் தன் குறையை வெளிப்படுத்துகின்றார்.

பற்றும் பாசமுமே இல்லறத்தில் அளவற்ற துன்பத்தினை வளர்க்கின்றன. சற்றே இடமளித்தால் இவை இருள் வலையைப் போன்று நம்மைச்சுற்றிப் பின்னிக்கொள்ளும். ஆதலால் சுவாமிகள் "காரார் கிரகவலை" என்றனர். யான் எனும் அகப்பற்றும், எனது என்னும் புறப்பற்றுமாகிய ஆசைகள் அகன்ருலொழிய மெய்யுணர்வு பெறுவது அரிது! "இங்ஙனம் மெய்யுணர்வு பெற முயற்சி செய்யாமல் குடும்ப மென்னும் வலைக்குள் சிக்கித் தவிக்கின்றேனே! நாள்தோறும் ஒவ்வொரு ஊராகத் திரிந்து கிடைக்கும் உணவை கைகளால் ஏற்றுப் புசித்தால் இந்தப் பந்தம் ஒழிந்திடுமே! என்னும் கருத்தில் அடிகளார், "கிரகவலையினிடை கட்டுண்டிருந்த களைகளெல்லாம் ஊரால் ஒரு நாள் கையுணவேற்று உண்டால் எனக்கிங் கொழிந்திடுமே" என்றனர்.

பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல்
ஆருந் துறக்கை அரிதரிது — நேரே
மனத்துறவும் அப்படியே மாணு இவற்றில்
உனக்கிசைந்த வாறென்றே ஓர்

என்று தாயுமான அடிகளாரால் போற்றப்பட்ட பட்டினத்தடிகளார்' காதற்ற ஊசியின் வாயிலாக மனத்துறவு பெற்றுக் கயிலை நாதனை வேண்டுகின்ருர் ;

இல்லந் துறந்து பசிவந்த போ(து) அங்(கு) இரந்துன்று
பல்லுங் கறையற்று வெள்வாயு மாயொன்றிற் பற்றுமின்றிச்
சொல்லும் பொருளும் இழந்து சுகானந்தத் தூக்கத்திலே
அல்லும் பகலும் இருப்பதென் றேகயி லாயத்தனே.

குபேரனுக் கீடான சுகபோக வாழ்க்கை வாழ்ந்த இவர் இங்ஙனம் நினைநதபோது மனம் சிறிதே சஞ்சலப்பட்டது, மீண்டும் தெளிவுற்று, மனமே! ஏன மயங்குகிருய்? குளிப்பதற்கு ஆறுண்டு; இளைப்பாரத் தோப்புண்டு; தங்கவும் உறங்கவும் பொதுக் கட்டிடங்கள் உண்டு; தரித்துக்கொள்ளத் திருநீறும் இருக்கிறது; உடுக்கக் கோவணம் இருக்கிறது. வீடுகளில் சென்று பிச்சை யேற்று உண்டு உறங்கிப் பின்னர் சும்மா இருக்கும் நெறியைக் கடைப்பிடித்தால் சுகமும் உண்டு! என்பதை வருமாறு பகர்கின்ருர் ;

ஆறுண்டு தோப்புண்டு அணிவீதி அம்பலந் தானுமுண்டு
நீறுண்டு கந்தை நெடுங்கோ வணமுண்டு நித்தநித்த
மாறுண் டுலாவி மயங்குநெஞ் சேமனை தோறுஞ்சென்று
சோறுண்டு தூங்கிப்பின் சும்மா விருக்கச் சுகமுமுண்டே

எனவும்; மாடு, கன்று, மக்கள் உண்டென்று மகிழ்ந்திருப்பதெல்லாம் ஒருநாள் அழிந்தே தீரும் என்பதை ஞானியர் வாயிலாகக் கேட்டுத் தெளிந்து பற்றறுத்துவிட்டோம். பிச்சை ஏற்கத் திருவோடும் உடுக்கக் கந்தையும். உள்ளத்தில் ஓதுவதற்கு ஐந்தெழுத்தும், சிவனடியார்களின் துணையும் இருக்க, மனமே! நீ ஏன் சஞ்சலப்படுகின்ருய்? எனவும் கேட்கின்ருர் ;

மாடுண்டு கன்றுண்டு மக்களுண் டென்று மகிழ்வ தெல்லாங்
கேடுண் டெனும்படி கேட்டுவிட் டோமினிக் கேள்மனமே
ஓடுண்டு கந்தையுண் டுள்ளே யெழுத்தைந்தும் ஓதவுண்டு
தோடுண்ட கண்ட னடியார் நமக்குத் துணையுமுண்டே

என்று கூறிச் சும்மா இருந்து சுகத்தை நாடினர். சும்மா இருத்தலே சுகம்! என வேத சாத்திர நூல்களும், மௌனகுருவும் கூறியும் என் அறிவில்லாப் பேதைமையால் கொடிய மாயையாம் உலக விடயங் களில் அலைகின்றேனே! இது என் விதியோ? என கலங்குகின்றார் தாயுமானவர்;

சும்மா விருக்கச் சுகம்சுகம் என்று சுருதியெல்லாம்
அம்மா நிரந்தரம் சொல்லவும் கேட்டும் அறிவின்றியே
பெம்மான் மௌனி மொழியையும் தப்பிஎன பேதைமையால்
வெம்மாயக் காட்டில் அலைந்தேன் அந்தோஎன் விதிவசமே!

இத்தகைய சும்மா விருக்கும் செந்நெறியையே கடைப்பிடித்தனர் அருளாளர். இதற்காக அமைதியான சூழ்நிலையை நாடி வனம புகுநத னர். இதை விளக்கும் புராணக்கதை யொன்றுண்டு முனிவாகள் பலர் கூடி பிரம்ம தேவனை நாடி சும்மா விருந்து நிட்டை கூடி சுகம்பெற புனிதத் தலத்தைத் தேர்ந்து கூறுமாறு வேண்டினராம். பிரம்மன் உலக முழுமைக்கும் நிகரற்றது திருமழிசையே எனத் தேர்ந்து கூற அனைவரும அங்கு சென்று தவஞ்செய்யத் தொடங்கினர். பிருகு முனிவர் என்பார் சகல கலைகள் மட்டுமன்றி சித்திகள் பலவும் கைவரப் பெறறு தவத்தில் மிக்கவர். அவர் 'தீர்க்க ஸத்ரம்' என்னும் ஒப்பற்ற யாகம் செய்யத் தொடங்கினார். இவ் யாகம் நிறைவு பெற்றால் தன் பதவிக்கே ஆபத்து வந்துவிடும் என அஞ்சிய இந்திரன் தேவமக ளாருள் அழகும், ஆற்றலும் நிரம்பிய தேவதாசியை அனுப்பி பிருகு முனிவரின் யாகம் நிறைவு பெறாதவாறு தடுக்கச் செய்தான,

பூவுலகில்தான் அரசர், கட்சிகள், உறவினர், அலுவலகம் ஆகிய வற்றிடை பகைமை உண்டென்றால், தேவருலகிலும் இப்பகைமை, பொறாமை பதவிமோகம் ஆகியவை இருக்கக் காண்கிறோம். மனதை இவ்வாசைகளின் பால் செலவிடாமல் தடுத்து அறிவனவழி நின்று வெற்றி கொள்ளவேண்டும். இந்திரனால அனுப்பிவைக்கப்பட்ட தேவ நங்கை முனிவரின் உள்ளத்தைச் சலனப்படுத்தித் தன் பால ஈர்த்துக் கொண்டாள்! முனிவர்களுக்கும் இத்தகைய சலனம் ஏற்படுமோ? விசுவாமித்திரர் முதலான மகரிஷிகளுக் கெலலாம் சலனம் ஏற்பட்ட தாகப் புராண வரலாறுகள் பகர்கின்றன. தாயுமானாரும் "முத்தனைய மூரலும்" எனும் பாடலில்,

"மாயா விலாச மோக
வாரிதியி லாழ்த்திடும் பாழான சிற்றிடை
மடந்தையர்கள் சிற்றின்பமோ
புத்தமிர்த போகம் புசித்துவிழி யிமையாத
பொன்னாட்டும் வந்ததென்றால்!
போராட்ட மல்லவோ? பேரின்ப முத்தியிப்
பூமியி லிருந்துகாண
எத்தனைவி காதம்வரு மென்றுசுகர் சென்றநெறி
இவ்வுலக மறியாததோ?" எனக் கூறுகின்றார்.

பிருகு முனிவருக்கும் ஒருகணம் மாயையால் சலனம் ஏற்பட்டத னால் தேவதாசியினிடமாக ஒரு குழந்தைக்குத் தந்தையானார்! இக் குழந்தையே பன்னிரு ஆழ்வார்களுள் திருமழிசை ஆழ்வார் எனப் பெயர் பெற்றது. தேவதாசி தன் பணி முடிந்தமையால் மறைந்து

விட்டாள். முனிவரும் தன் செயலுக்கு நாணமுற்று அக் குழந்தை யைப் பிரப்பஞ்செடி நிழலில் கிடத்திவிட்டுப் புறப்பட்டார். பிற்காலத் தில் பெரும் ஞானிகளாய் விளங்கிய பலருடைய வாழ்க்கையில், இங்ஙனம் குழந்தை வடிவில் ஆதரவற்ற நிலையில் இருந்ததாக வரலாறு கள் பகருகின்றன.

முனிவர் விட்டுச்சென்ற குழந்தை அழத்தொடங்கியது. உலகத் தாயான தேவி குழந்தைக்கு ஞானப்பாலூட்டினாள். அவ்வமயம் திருமழிசையை அடுதத வனததினின்றும் வந்த வேடுவன் அக் குழந் தையைக் கண்டெடுத்துத் தன் மனைவியிடம் கொடுத்தான். தாயன் புப் பெருக்கினால் பால் தானே சுரந்தது! ஞானப்பாலைப் பருகிய குழந்தை ஊனப்பாலைப் பருகமறுத்தது! பசி தாகமின்றியும் மல ஜல உபாதையின்றியும் இருந்த அக் குழந்தையை வனத்திலிருந்த மக்கள் வியப்போடு பார்த்தனர்.

நம் ஒவ்வொருவருக்கும் 5 உடல்கள் இருக்கின்றன! 1. தூலஉடல் 2. சூட்சும உடல் 3. கஞ்சுக உடல் 4. குண உடல் 5. காரண உடல் என்பவையாகும். நம் கண்களால் காணக்கூடியது தூல உடலேயாகும். இத் தூல உடலுக்கே நாம் உணவு உட்கொள்வது! சூட்சும உடலுக்குப் பிராணவாயு, உணவாகிறது. கஞ்சுக வுடலுககு உணவு? நம் உள்ளத்தினின்றும் எழும் எண்ணக குவியல்கள்! ஆத்ம சாகருக்கே இவை வெளிப்படை. பாமபு எலிகளை விழுங்குவது போனறு, கஞ்சுகவுடல் எண்ணங்களை வழுங்குகிறது. இறுதியில சிவனையே விழுங்கும் உடலும் உண்டு! இவற்றை வேதாந்த வசாரணை யால் கேட்டுத் தெளிக!

இங்ஙனம் தூல உடலிலேயே பசி தாகம் உறக்கமின்றி வாழ்ந்த அக்குழந்தையை மக்கள் திறள் திரளாக வந்து பார்த்து வியந்தனா! ஒழுக்கத்தில் வழுக்கினமையால் பிற்பட்டோா என வழங்கப்படுகின்ற குலத்துத் தம்பதயர் இருவர் அத்தெய்வக் குழந்தையைக் கண்ணுறும பொருட்டு பசும் பாலைக் காய்ச்சி எடுத்துக் கொண்டு வந்தனர். பிறப் பால் மட்டுமே பிற்பட்டோரேயொழிய வாழ்க்கை நெறியில் இறைவனின தொண்டர்கள் அவர்கள். இறைவனுக்குப படைப்பதாகவே நினைந்து கொண்டு வந்த பாலை குழநதை வாங்கிப பருகியதுமட்டுமன்றி அவர் களின் பிள்ளையில்லாக் கலியைத் தீர்க்க, எஞ்சிய பாலை அத்தம்பதியர் பருகுமாறு பணித்தது. அருந்திய அவர்களும் பிள்ளையிலலாக் குறை தீர்நது மாதங்கள் பலகழிந்த பின் ஆண்மகவு ஒன்றை ஈன்றெடுத தனர். அக்குழந்தைக்கு கணிகண்ணன என்ற பெயர் சூட்டி வளர்தது வருவாராயினர்.

வேடுவர் குலத் தம்பதிகளிடம் வளர்ந்து வந்த திருமழிசையாழ்வார் ஏழுவயது பருவமடைந்தார். எந்தப் பள்ளியிலும் சேரவில்லை; கலைகள் கற்கவுமில்லை! ஆனால் வேதமுடன் ஆகம புராண இதிகாசங்களை யெல்லாம் உள்ளவாறு நயம்பட நவின்றார்; விஞ்ஞான அறிவு படைத்த வர்கள் இக்கருத்தை ஏற்கமறுககலாம்! ஆனால் இதனை ஆழ்ந்து சிந்தித்து தெளிந்த வீரத்துறவி விவேகானந்தர், இது முற் பிறவியின் தொடர்பு என்பதைத் தெளிவு படுத்தி யிருக்கின்றனர், குயவன் பாண் டங்கள் செய்வதற்கு மண்ணின் வளப்பத்தை அறிவது போல, எதை அறிய வேண்டுமோ அதை அறிந்தால்! அனைத்தும் அறியலாம! என்பர் அவர்.

தெளிந்த அறிவு பெற்ற திருமழிசை ஆழ்வார் தம் இருப்பிடம் விட்டுப் புறப்பட்டுத் திருவல்லிக்கேணி அடைந்தார். அங்கு தவத்தைத் தொடர்ந்து எண்வகைச் சித்திகளையும் பெற்றார்; ஒரு நாள் சக்தி சாரன் எனும் தேவனொருவன் விண் வெளி வழியாகச் சென்ற போது ஆழ்வார் தவமிருந்த இடத்தில் தவக்கனல் வீசவும் கீழிறங்கி அவரைப் பணிந்தான். தவத்தில் சிறந்த உத்தமரே! தாங்கள் உடுத்துள்ள பழைய ஆடையைக் களைந்து இந்த இரத்தினக் கவசத்தை அணிந்து கொள்ளுங்கள் எனக்கொடுத்தான். ஆழ்வார் சூரியனைக் காட்டிலும் ஒளி மிகுந்த கவசம் ஒன்றை உண்டாக்கிக் காண்பித்தார்! தேவன் மேலும் தன் கழுத்திலிருந்த நவரத்தின மாலையொன்றைக் கழற்றி அளிக்க, ஆழ்வார் தன் கழுத்திலணிந்திருந்த துளசி மாலையைக் கழற்றிக் காண்பித்தார். அதன் ஒவ்வொரு மணியும் கோடி சூரிய ஒளி மின்னக் கண்ட தேவன் வெட்கித் தலை குனிந்து மன்னித் தருளுமாறு வேண்டி விடை பெற்றான்.

பலர் ஜெபமணிமாலையைக் கையில் பிடித்து ஐந்தெழுத்தும் எட்டெழுத்தும் ஏனை எழுத்துக்களை யெல்லாம் ஜெபிப்பதைக் காண்கிறோம். ஆனால் தாயுமானர் குருமணியைப் பற்றிக் கூறுவதைக் காண்போம் "மணிமந்த்ர சித்திநிலை எய்தினர்கள் கோடி சூழக் குருமணி இழைத்திட்ட சிங்காதனத்தின் மிசை கொலுவீற்றிருக்கும் நின்னைக் கும்பிட்டு அனந்த முறை தொண்டனிட்டு என் மனம்குறையெலாம் தீரும் வண்ணம் மருமலரெடுத்து உன்னிரு தாளை அர்ச்சிக்க எனை வாவென்று அழைப்பதெந்நாள்?" என மௌன குருவை வணங்கிப் போற்றுகின்றார். குருமணி என்பதற்கு நிறமுள்ள மணி அல்லது ஒளி பொருந்திய மணி என பொருள் கொள்வதைக் காட்டிலும் குருவினால் கொடுக்கப் பட்ட உபதேசமென்னும் ஒப்பற்ற மாணிக்கம் எனப் பொருள் கொள்வது சாலவும் பொருந்தும், அத்தகைய உபதேசமாகிய பீடத்தில் ஆன்மா அமர்ந்து இருத்தல் வேண்டும். இதுவும் சாதகருக்கே தெளிவு !

சித்தர் கணத்தைப் போற்றிப் பாடிய தாயுமான அடிகளார் "கெசதுரக முதலான" எனும் பாடலில் இவர்களின் தன்மையை "என்றைக்கு மழியாத சிவராச யோகராய் இந்திராதி தேவர்களெல்லாம் விசயசய சயவென்ன ஆசிசொலவே கொலு விருக்கும் நும் பெருமை எளிதோ? என வியந்து பேசுகின்றார். மேலும் அவர்கள் பெற்ற சித்திகளையும் விளக்கியுள்ளார்; கற்பகத் தருவை இவ்வுலகத்தில் வரவழைப்பீர்! பதுமநிதி, சங்கநிதி எனும் வேண்டியதைத் தர வல்ல இரண்டனையும் உமக்கு வேலையாட்கள் போல இரு மருங்கிலும் நிற்க வைப்பீர்! பிச்சை எடுத்துப் பிழைப் போரை நாடாளும் மன்னராக்குவீர்! ஊழிக்கால வெள்ளத்தை ஒரு கிணற்றுக்குள் சுருக்கி வைப்பீர்! மண் ஓட்டினைத் தங்கமாக்குவீர்! ஆதிசேடன் இளைப்பாறுமாறு உலகத்தை யோகதண்டக் கோலினால் நிற்க வைப்பீர்! ஆக இவ்வளவு வல்லமையும் பெற்ற நீவிர் என்னுடைய மனமாகிய கல்லை அனலில் இட்ட மெழுகாக உருகச் செய்வது அருமையோ? எனக்கேட்கின்றார் ;

இத்தகைய சித்திகள் அனைத்தும் கைவரப்பெற்ற திருமழிசையாழ்வாரிடத்து ஒரு நாள் கொங்கணர் என்னும் சித்தர் ரசக் குளிகையொன்றைக் காட்டி, இது காணி கோடியைப் பிரிக்கக் கூடியது என்றார். ஆழ்வார் தாம் ஒரு குளிகையைக்காட்டி இது காணிகோடானு கோடியைப் பிரிக்கக் கூடியது என்றார். பரிசோதித்துப் பார்த்த கொங்கணர் அங்ஙனமே இருக்கக்கண்டு வணங்கி விடைபெற்றார்.

மகரிஷி தாயுமானவர் தம் குரு நாதனை நினைந்து, செம்பினில் களிம்பேறினதைப் போல அறியாமையில் கிடந்த தன்னையும் ஞான அனல் கொண்டு பருவம் பார்த்து அருள் எனும் ரசக் குளிகையால் பத்துமாற்றுத் தங்கமாக்கியதாக ''கருமருவு குகையனைய'' எனும் பாடலில் ''பருவமதறிந்து நின் அருளான குளிகை கொடு பரிசித்து வேதி செய்து பத்து மாற்றுத் தங்கமாக்கியே பணி கொண்ட பட்சத்தை என் சொல்லுகேன் ?'' என வியக்கின்றார். எனவே அருளாகிய ரசக் குளிகையைப் பெற்றவர்களுக்கு உலக நெறி ரசக் குளிகை மிகையன்று !

இவ்வண்ணம் தவநிலை நிரம்பப் பெற்ற ஆழ்வார் திருக்காஞ்சி சென்றார், இவரின் அருளால் பிறந்த கணிகண்ணரும் அவ்வமயம் காஞ்சியில் இருந்தார். ஆழ்வார் காஞ்சி வந்ததும் கணிகண்ணன் அவருக்கு மாணவராகவும் தொண்டராகவும் சேவை புரிந்தார். இவர்கள் இருவருக்கும் வயது முதிர்ந்த மூதாட்டி ஒருவள் பணி விடை புரிந்து வந்தாள். மூதாட்டியின் சேவைக்கு மகிழ்ந்த ஆழ்வார் அம்மையே ! நீர் வேண்டுவது யாது ? என வினவினார். அவ்வம்மை யார் தனக்கு முதுமை நீங்கி இளமை வேண்டினாள். அவள் விருப்பப் படியே ஆழ்வார் அருள் புரிந்தார்.

அந்நாளில் காஞ்சிமாநகரை ஆண்டு வந்த மன்னன் பல்லவ ராயன் இளமையும் அழகும் பூத்துக்குலுங்கும் அப்பெண்ணைக் கண்டு மணமுடிக்க நினைந்தான். அவளின் இசைவு பெற்று மங்கல நாளில் மங்கல நாண் பூட்டினான். ஒரு நாள் அந்தப்புரத்தில் அவளோடு தனித் திருக்கும் போது அவளின் தளரா இளமையும் அழகையும் பற்றிப் புகழ்ந்து பாராட்டினான், இதற்குக் காரணம் கணிகண்ணரே ஆவார்; அவருக்குத் தொண்டு செய்து திருமழிசையாழ்வாரின் அருள் பெற்று இவ்விளமை பெற்றேன் என்று நிகழ்ந்ததை எடுத்துரைத்தாள். மறுநாள் அமைச்சரை அழைத்து கணிகண்ணரை அழைத்துவரச் சொன்னான் மன்னன். அவ்வண்ணமே வந்த கணிகண்ணரை நோக்கி யான் திருமழிசையாழ்வாரைக் காணவேண்டும்; அழைத்து வாருங்கள் என்றான். ஆழ்வார் எங்கும் வாரார் ! என்றார் கணிகண்ணர். சரி ! எம் மீது நீர் ஒரு கவி பாடும் ! என்றார் மன்னன். வைகுந்தவாசனின் திருவடியைத் தவிர மானிடரைப் பாடோம் ! என்றார் கணிகண்ணர். அரசனுக்குச் சினம் மூண்டது ! கேவலம் ஒரு துறவி ! உனக்கு இவ் வளவு ஆணவமா ? இப்போதே நீ நாடு கடக்கக் கடவாய் ! என ஆணை பிறப்பித்தான்.

'துறவிக்கு வேந்தன் துரும்பு' என்பதை மன்னன் அறியான் போலும் ! இவற்றிற் கெல்லாம் அஞ்சுபவர்களா அருளாளர்கள் ?

''கண்ணுவா ரேனுமுனைக் கைகுவியா ராயின் அந்த மண்ணுவார் நட்பை மதியேன் பராபரமே'' என்பர் தாயுமானார் அது வன்றியும், ''ஐயனே உனையன்றி ஒரு தெய்வம் கையினால் தொழவுங் கருதேன் கண்டாய் !'' எனவும் ஐயந்திரிபற மொழிந்துள்ளார். ஒரு முறை பட்டினத் தடிகளாரைச் சந்திக்கச் சோழ மன்னன் அவரிருக்கும் இடம் நாடி வந்தான். பட்டினத்தடிகளைக் கண்டு, உன் செல்வங்களை யெல்லாம் துறந்து இங்ஙனம் துறவியானதன் பலனென்ன ? என்று கேட்டான். அதற்கு அடிகளார் நீரோ நாடாளும் மன்னர் ; யானோ ஏதுமற்றத் துறவி ! எனினும் நீர் நிற்கின்றீர் ! யான் அமர்ந்திருக்

கின்றேன். இதுவே பலன் ! என்றனர். அடிகளாரின் கூற்றில் ஆழ்ந்த பொருள் பொதிந்திருப்பதை யுணர்ந்த மன்னவன் அவரைப் பணிந்து உபதேசம் எனும் அரும் பொருளைப் பெற்ருன் என அறிகின்ருேம். பட்டினத்தார் அமர்ந்திருந்தது குருமணி இழைத்திட்ட சிங்காதனம் ! அதன் பெருமை சொல்லுந் தரமன்று !

ஆகவே கணிகண்ணருக்கும் பல்லவ மன்னனுல் ஆகவேண்டிய தேதுமில்லை. அங்கிருந்து நேரே ஆழ்வாரிடம் வந்தார் : நிகழ்ந்த வற்றைக் கூறி, ஐயனே ! விடைகொடுங்கள் ! என வேண்டி நின்ருர். கணிகண்ணு ! நீ சென்ற பின் எனக்கென்ன இங்குவேலை ? நானும் வருகிறேன் என்று ஆழ்வாரும் புறப்பட்டார் ! புறப்பட்டவர் சற்றே சிந்தித்தார் ; நாம் இருவரும் பெயர்ந்து செல்ல மணிவண்ணப் பெருமாளுக்கு இங்கென்னவேலை ? என்றவராய் ;

கணிகண்ணன் போகின்ருன் காமரு பூங்கச்சி
மணிவண்ணு நீ கிடக்க வேண்டாம் — துணிவுடைய
செந்நாப் புலவனும் போகின்றேன் நீயு முன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள் !

என்று பெருமானை விண்ணப்பஞ் செய்தார், கணிகண்ணர் முன் செல்ல ஆழ்வார் பின் செல்ல அவர்களைத் தொடர்ந்து பகவானும் ஆதி சேடனுகிய பாம்போடு பின் தொடர்ந்தார் !

இந்துக்கள் வணங்கும் கடவுளர் யாவர்க்கும் பாம்பு வாகனமாகவும் அணிகலனுகவும் அமைக்கப்பெற்றுள்ளது சிந்தனைக்குரிய ஒன்று ! ஸ்ரீமந் நாராயணன் பாம்பைப் படுக்கையாகக் கொண்டுள்ளார் ! சிவபெருமான் கழுத்திலும், காதிலும் அணிந்திருக்கின்ருர். இன்னும் முருகன், தேவிபோன்ற அநேக தெய்வ வடிவங்களும் பாம்பை உடையனவாகக் காண்கின்ருேம். "வாதனையோடு ஆடும் பனப்பாம்பு மாய ஒரு போதனை தந்து ஐயா புலப்படுத்தவேண்டாவோ ?" என்ற தாயுமானவரின் கருத்தோடு ஒப்பு நோக்கிச் சிந்தித்தல் வேண்டும்.

மணிவண்ணப் பெருமாள் பாம்பைச் சுருட்டிக்கொண்டு காஞ்சி மாநகரை விட்டு நீங்கவும், நகரில் உள்ள ஏனைய தெய்வங்களும் அகன்றன ; எனவே நகர் முழுவதும் ஒளி இழந்து இருள் கவ்வியது ! ஆம் ! இறுதி நாளில் நம் உடலினின்றும் உயிர் பிரிந்ததும் இருள்தான் எஞ்சும் ! சீவன் சிற்றொளி ! பிரம்மம் பேரொளி ! இவ்வொளி நெறியைக் காண்பதற்கே யோகாசன ஆலயம் சீரிய தொண்டர் பணி செய்து வருகின்றது !

இங்ஙனம் நகர் இருளில் மூழ்கக் காரணம்கண்ட மன்னன் அமைச்சர் மற்றும் பரிவாரங்களுடன் ஓடோடியும் வந்து பயணம் செய்து கொண்டிருந்த திருமழிசையாழ்வாரின் திருவடிகளில் நெடுமரமாக வீழ்ந்தான். ஐயன்மீர் ! அறியாமல் புரிந்த பிழை பொறுத்தருள்வீர் ! என வேண்டினுன். திருவுள மிரங்கிய ஆழ்வார் பாமாலையால் மீண்டும் பெருமானை விண்ணப்பஞ் செய்தார் ;

கணிகண்ணன் போக்கொழிந்தான் காமரு பூங்கச்சி
மணிவண்ணு நீ கிடக்க வேண்டும் — துணிவுடைய
செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன் நீயு முன்றன்
பைந்நாகப் பாய்படுத்துக் கொள்

என்றவுடன் பகவானும் மற்றைய தெய்வங்களும் திருக்காஞ்சி திரும்பினர். திருமழிசையாழ்வார் சொன்னவண்ணமே பெருமாள் செய்தமையால், 'சொன்னவண்ணம் செய்த பெருமாள்' என்ற திருப்பெயர் ஏற்பட்டது!

மன்னனின் வேண்டுகோளுக் கிணங்கி சில காலம் காஞ்சியில் தங்கிய திருமழிசையாழ்வார் கும்பகோணம் ஆராவமுதப் பெருமாளைக் காணப் புறப்பட்டார். வழியில் பெரும்புலியூர் என்னும் கிராமத்தில் தங்கியபோது அங்கு வேதபாராயணஞ்செய்துகொண்டிருந்த அந்தணர்கள் இவரைக் கீழ்க்குலத்தவர் என நினைந்து பாராயணத்தை நிறுத்தி விட்டனர். அவர்களின் அறியாமையை அறிந்த ஆழ்வார் அங்கிருந்து புறப்பட்டார். ஆழ்வார் புறப்பட்டதும் வேதியர் வேதபாராயணஞ் செய்யத் தொடங்கினர். ஆனால் அனைவர்க்குமே விட்ட இடந் தெரியாமல் திகைத்து நின்றனர்! அதோடன்றி ஆழ்வார் செல்லுந் திசைநோக்கி அவ்வூர்க் கோவில் பெருமான் சிலையின் தலை திரும்பிக்கொண்டே இருந்தது! கோவில் குருக்கள் ஓடிவந்து அவ்வதிசயத்தைக் கூறவும், வேத பாராயணஞ் செய்தவர்கள் இங்கு நடந்தவற்றைக் கூறவும் இதற்குக் காரணம் ஆழ்வாரேயாவர்! அறியாமல் அவரை சூத்திரன் என்று ஒதுக்கினோமே! இறைவனடியார் யாங்ஙனம் சூத்திரர் ஆவார்? என்று அனைவருமாக ஓடிச்சென்று அவரின் திருவடிகளில் வீழ்ந்து மன்னித்தருள வேண்டினர்.

ஆழ்வார் அவர்களுக்கு நல்லறிவு புகட்டி அருள்கூர பாராயணம் விட்ட இடம் நினைவுக்கு வந்தது! அவர்கள் அவரை அன்போடும் பய பக்தியுடனும் அழைத்துச்சென்று அக்ரபூசை செய்து வணங்கினர்: இச் செயல் சில அந்தணர்க்கு அருவருப்பைத் தந்தது. இதை உணர்ந்த ஆழ்வார் பெருமானை வேண்ட பெருமான் ஆழ்வாரின் திருமேனியில் காட்சி தந்தருளினர்! அனைவரும் ஆழ்வாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கிப் போற்றினர். அங்கிருந்து புறப்பட்ட ஆழ்வார் திருக்குடந்தை அடைந்து பிரபந்தம் பாடி நிட்டைகூடி இறைவனோடு கலந்தார்.

தாயுமான சுவாமிகள் இப் பாடலில், என்னுயிர்க்கு உயிரான பெரியோய்! ஆலகால விஷத்தையே அமுதமாக உண்டோய்! இருள் சூழ்ந்த பாசபந்தம் நிறைந்த குடும்பவலையுள் சிக்கித் தவிக்கின்றேனே! யான் எனது என்னும் செருக்கு என்னைப் பீடித்து நிற்கின்றனவே! நாளும் ஊர் ஊராகச் சென்று கையினால் பிச்சையேற்று உண்பேனாயின் இத்துன்பம் அகலுமோ? என வேண்டுகின்றார்.

திருமணம்

சென்னை திருவல்லிக்கேணி சிங்கராச்சாரி தெரு, எண் 9, ராவ்பகதூர், ஆலத்தூர் நாதமுனி செட்டி ராமாநுஜ கூடத்தில், உயர்திரு. K. M. சுவாமி (Retd. Nursing Superintendent, C. M. C. Hospital, Chengleput) அவர்களின் திருநிறைசெல்வி மலர்விழிக்கும், செங்கற்பட்டு திரு, முனுசாமி அவர்கள் குமாரன் திருநிறைச்செல்வன் M. சுகானந்தனுக்கும் (Collectors' Office, Kancheepuram) 15—3—1978 காலை 9-மணி யளவில், சென்னை, யோகாசன ஆலய நிறுவனர், தலைவர், உயர்திரு. கோ. மு. சுவாமி அவர்கள் வேத வேள்வி செய்து திருமணத்தை நடத்திவைத்தார்.

WINGS OF DIVINE WISDOM

by YOGI SIVALINGAM—U. S. A.

Devotion will lead the great pyramid·path,
Devotion will lead the good-eye opener,
Devotion will lead the great understanding,
Faith means Vow for one's life,
Faith means Vow for one's progress,
Faith means Vow for one's Truth-Spirit,
Belief will lead the Ancient-path,
Belief will lead the Knowing-Reality,
Belief will lead the Great-Godhead,
Trust will show the Truthful fruits,
Trust will show the Painless-path,
Trust will show the Useful progress,
Yogi lives with the Divine glory,
Yogi lives with his mind, which is the Almighty's name,
Yogi lives with great Faith, Trust, Belief by Himself.
Yogi's home is great,
Yogi's life is great,
Yogi's heart is great,
Yogi's food is great,
Yogi's path is great,
Yogi's followers are great,
Because the Almighty always with him, and is practical way
to attain the Immortality path.

Now, how happy you are, when you are on the one path and
faithful,
The divine grace with you and greatfully succeed.
Practice everyday more and more,
then you can find the radiant heart.
Faithful practices always show you the divine grace,
Control the emotions, then you can find the true life.,
Control the emotions, then you can find the Divine love
elsewhere,
Divine love is unlimited,
Divine love means great faith, trust, belief,
Divine love—always progress in the spiritual path,
Divine love all the world covered,

Clear the nerves, then you become perfect for the spiritual life,
Practical way clean the nerves and enjoy within.
Blood vessels are my yoga devotess,
My two eyes are my devoted secretary and assistants,
Ten toes are my worlds,
Ten fingers are my practical to attain the Kundalini yoga,
Two hands are my devoted good friends,
Two legs are my devoted divine pens.
I am walking with my heart,
I am talking with my heart,
I am thinking with my heart.
I am eating with my heart,
I am enjoying divinity with my heart.
I am hearing the divine practices with my two ears, by experiences.

Devotion is so very important,
Get steady mind and be faithful for One Goal,
Whatever the people may say, don't hear,
Hearing comparing, thinking are a great Obstacle,
Spiritual practical devotees never care,
Go on, march on, reach the one goal,
Steady, Inner-strength is one of the great Pyramids,
Good and bad are nothing for the spiritualists.
In this world no one is good and bad,
Lord Buddha suffers from the devotees,
Lord Christ suffers from the devotees,
Lord Yogi Milarepa suffers from the devotees,
Lord of Lords, all suffer from the devotees,
Even though, the Spiritualists all win.
Progress comes from the practical way to fight others without one drop of blood falling down: this is a great YOGA,
Fight means, you yourself and don't compare,
Divinity, Eternity, Compassion—these are Yoga.
Everyone's stomach has great dirt and smell,
Don't compare, don't hear from the unqualified, sinners.
Punctually practice, be clearer, be patient.

YOGASANAS

Translated version of Mr. E. S. Rangasami.
(a great exponent of Yogasans)

by Sri R. Meharbabu, B. Sc., M. A., B. T.

IYAMA

Iyama means compose or doing or conducting. So in Yoga practice we have to take it in the sense '**DOING RIGHT THINGS AND DESIST FROM DOING WRONG.**' What is to be done by man in his daily life? It is to be understood and followed accordingly. It does not mean that it is intended for sages alone. It is common to every man to all human beings. Accordingly our life is divided into four distinct periods. They are (1) Brahmacharia (2) Grahastha (3) Vanaprastha and (4) Sanyasam. Man should be in any one of these school or Ashram and he has to do the duties of that Ashram during his period of stay. One who dose not join any of these will go astray. Such persons during the Vedic period were called devils, imps, animals etc.

A person who practises Yoga might be a Brahmachari or Grahastha or Vanaprastha or Sanyasi. He has to follow the philosophy of this Ashram and practise Yoga by keeping in mind the natural qualities of the all pervading SUPREME SPLENDOUR The Lord Almighty and think that He is sitting in front of him face to face, by purifying his nature of activities. The period of Brahmacharia has the range from seven years to twenty five years of one's life. Grahasta has the range from twenty five years to fifty years. Vanaprastham is calculated from fiftieth year to sixtieth year, whereas sanyasam starts from sixtieth year to hundredth year. According to Vedic Sastras of sages of sagacity' a man can follow any one of these ashram and practies Yoga and attain the ULTIMATE (MOKSHA) glory of his life.

If he is a Brahmacharya he should join the school or Ashram of Brahmacharya and learn the Veda sastras systematically for the attainment of Lord Supreme. Practising Yoga, by following the principles of philosophy etc. are the means for it. Through this he secures more refined knowledge by coming into closer contact with wise and learned. He has to acquire the skill of True wisdom, pure thinking and so on with earnest enthusiasm. That which gives wisdom, self restraint etc. which dispenses from unholy doings and wrongs is the right object in which he has to practise. Early raising, passing stool, taking bath, chanting psalms or praying the Almighty, all these activities are to be done daily systematically.

Before going to breakfast he has to practise Yoga. About 8.30 a. m. breakfast may be taken. Then with the guidance of a right and able teacher he learns Vedas, Upanishads and sastras

The pupils of Brahmachariya are not permitted to enjoy fun and frolic, amusement, music, dance, drama, dinner, coition, chewing pans, using spices etc. They should not indulge in such activities. In short Yoga Brahmachari should control his five senses of body, mouth, eyes nose and ears and so also the qualities of the senses such sound, feeling or touching, sensation, sight, smell and taste like a charioter who controls the horses with the help of the reins. Above all we have to practise these activities in the name of IYAMA. WHAT IS NIYAMA?

THE NEED FOR YOGA FOR ALL IN DAILY LIFE

KALPA—*Continued.*

These organs do not enjoy any holiday. Do not sleep or take rest Even though when a person is resting or sleeping, the important organs work without a murmur. They do their duty and do not desire any special reward for them. They work in perfect uniformity and harmony with each other for the normal functioning of the body. As stated in ' Gita ' they do not aim at anything in return. In otherwords they teach us how to keep ourselves activily day in and day out, in season and out of season with mutual understanding with each other. By observing all these things one should feel how wonderful is this magical machine - the human body, the moving temple of GOD.

Hindu theology is full of scientific truth, because the Hindu theologians were scientists. Indian philosophy and Hindu Darma are rooted in the belief that soul passes through a long succession of 84 lakh yonis (specis of creation) to arrive at its ultimate and best form of life - the human being. Modern science also supports this view.

It is said in our puranas that the 84 lakh yonis comprises of 4 lakh human beings, 20 lakh of beasts, 11 lakh insects, 10 lakh birds, 9 lakh water animals and 20 lakh other beings.

Shri Bala.Gangadhar Tilak had well studied the comparative views of Western and Eastern science and quoted a passage from a book as: ' As nature develops one gives birth to the other. If one colour is mixed with another one, a third colour will come out. The seeds of all the creepers, flowers, fruits and trees are imbedded in the earth and when come in contact with earth and water, they sprout up. The seeds of all kinds of growth are found in water and earth. This is the magic structure of nature'.

Perhaps that is how the 84 lakh Asanas were brought forth from the 84 lakh yonis referred to above. The number gets successively reduced by 84 thousand, then 84 hundred and ultimately 84 numbers only. Out of 84 yogasanas which were said to be prevalent in ancient days, only some can now be clearly

identified by pictures and names. Even among them, some can neither be practised by an individual, nor are they considered necessary for the individual especially a Grahastha or a sedantary worker. The 17 yogasanas prescribcd is just sufficient for a Grahastha and are simple to practise.

Yogasanas are to be practised to keep the body in a healthy condition. Human body is after all a machinery, to be sure, of much delicate nature. The presence of a grain of sand in a watch will retard its movements, if not, arrest altogether. What then will happen to this intricate mechanism of the human body if the waste and poisonous material begins accumulating, in some part of the body.

—*Continued.*

ஆலயக் கொள்கை ஆறு

(மலர் 30, இதழ் 10-ன் தொடர்ச்சி)

யோகாசன ஆலயக் கொள்கைகள் ஆறனுள் முதற்கொள்கையான, கடவுள்; சிவமயம் நிஷ்களம், நிர்க்குணம், நிராலம்பம்' நிர்விஷயம் என்பதனை முன்னர் கண்டோம்; விஷ்ணுமயமாய் இருப்பவர் என்பதனை ஈண்டு காண்போம்.

எங்கும் நீக்கமற நிறைந்துள்ள வஸ்து எதுவோ? அதுவே விஷ்ணுமயம் என்பதாகும். "அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது எதுவோ? அதுவே விஷ்ணுமயமாகும்! சர்வ வியாபி எனினும் அப்பொருளையே குறிக்கும் கொளகையின் தொடக்கத்தில், கடவுள சிவமயம் எனவும் முடிவில் விஷ்ணுமயம் எனவும் அமைந்துள்ளமை கற்றார்க்கும் கல்லார்க்கும் கழிபேருவகை யளிக்கவல்ல ஒற்றுமை நயமாகும். சொல் வடிவில் இவை இரண்டேயன்றி பொருள வடிவில் ஒன்றே யாம். பால் என்னும் பொருள் உலகில் எந்நாட்டிலும் ஒன்றே. ஆயின்! அந்தந்த நாடுகளில் வழங்கப் பெறும் மொழி வேறுபாடுகளினுல் பெயர் வெவ்வேறு கொள்கிறதல்லவா? அவ்வாறே கடவுளைச் சிவமெனினும் விஷ்ணு எனினும் பொருள் ஒன்றேயாம். " ஒரு நாமம் ஒருருவம இல்லார்க்கு ஆயிரந் திருநாமம் பாடி தெள்ளேணம் கொட்டுவது மரபாகி விட்டது.

கற்றுச், சிந்தித்துத், தெளிந்து அனுபவத்தில் உணர்ந்தோர்க்கு இஃது ஒப்ப முடிந்தது. கற்றல் ஒனறுடன நின்றவர்க்கு மாறுபட்டது. இதனுலன்றோ சைவ வைணவ மற்றும சமயப்போர்கள் மூண்டு இந்துக்களிடையேயும் ஒற்றுமை குலைந்தது? அவ்வச்சமயங்களாயினும் அவ்வவற்றுள் ஒற்றுமை இருந்தனவா? எனின்? அதுவுமன்று! அவற்றுளும் பல்வேறு பிரிவுகள்! வைணவர்களுள் வடகலை, தென்கலை, மற்றும் சாதி பேதங்கள்; சைவர்களுள், பாடாணவாத சைவம், சங்கிராந்தவாத சைவம், அவிகாரவாத சைவம், பரிணுமவாத சைவம், சுத்த சைவம், மற்றும் வீரசைவம் போன்று எத்துணையோ?

உலகில் எத்துணைச் சமயங்கள் மதங்கள் இருக்கின்றனவோ?; அவை அணைத்தையும ஒன்று சேர்த்துக் கேட்கின்ருர் தாயுமான அடிகளார் "சமய கோடிக ளெல்லாந் தந் தெய்வம் எந்தெய்வ மென்று எங்குந் தொடர்ந்து எதிர்வழக்கிடவும் நின்றது எது?" "ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு" என சுருங்கக் கூறினுர் பட்டினத் தடிகள்.

சமயக் கூட்டுக்குள் அகப்படாத ஒன்றை ‘சமயாதீதப்பழம்பொருள்’ என்றனர் தாயுமானவர். ஒன்று (ஏகம்) எனவும் இரண்டற்றது [அத்துவிதம்] எனவும் பேசுவது வேதம். இவ்வுண்மையை விளக்க வந்த அறிவுடைச் சான்றோரையும் தெய்வங்களாக்கினர் அவர்கள் பெயர்களால் மதங்களைத் தோற்றுவித்துப் பூசல்கள் மலிந்தன. இவ்விருபதாம் நூற்றாண்டின் இறுதியில் சற்றே மாறுபட்டு அரசியல் கட்சிகளில் புகுந்து விட்டது இப்போர்.

மேற்கூறிய வேறுபாடனைத்தும் கல்வியறிவோடு நின்றதன் பயனேயாகும். இதனாலன்றோ “கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள் என அடுக்குச் சொற்களால் கூறினார் போலும் தாயுமானவர்! யோகாசனாலயம் இதனை நன்குணர்ந்து “கற்றதனால் ஆய பயன் என்கொல்? வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்” எனும் பொது மறை நெறி நின்று சாதித்து வருகின்றது.

வேதம் கூறும் “ஓம்” எனும் ஒப்பற்ற மொழி, அகச்சமயம், புறச்சமயம் அகப்புறச் சமயம், புறப்புறச்சமயம் ஆகிய அனைத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது. இந்து தர்மத்தின் பொதுவான மொழி இது; இதனை நன்குணர்ந்த தாயுமானவர், “தெய்வமறை முடிவான பிரணவ சொரூபியே” என்று தெளிவுபடக் கூறினார். இவ்வொப்பற்ற சொல்லின் பொருளை குருவழி கேட்டுச், சிந்தித்துத், தெளிந்து சாதிப்போரிடத்துச் சாதி, சமய வேறுபாடு காணவியலா!

சைவர்கள் தம் சமயத்தை வளர்க்க சைவபுராணங்களும், வைணவர் தம் சமயத்தை வளர்க்க விஷ்ணு புராணங்களும் இயற்றினர். இவைகளுள் பொதிந்துள்ள பொருளைக் காணுமிடத்து அவ்வக் காலங்களில் இறைவன் நல்லனவற்றைக் காத்துத் தீயனவற்றை அழிக்கவும் செய்கிறான் என்பது புலனாகிறது. வைணவக் கடவுளான மகாவிஷ்ணு அவ்வப்போது பல்வேறுவடிவங்கொண்டு தர்மத்தைக்காத்து அதர்மத்தை அழித்திருக்கின்றார். அவை 10 அவதாரங்களாகச் சொல்லப்பட்டுள்ளன. மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனம், பரசுராமன், தசரதராமன், பலராமன், கிருஷ்ணன் ஆகியன முடிந்தவை கல்கி கலியுகத்தில், எடுக்க இருப்பது!


மச்சாவதாரம்: ஒருகாலத்தில் பிரம்மதேவன் கண்ணுறங்கி இருந்த நேரத்தில் சோமகன் எனும் அசுரன் வேதங்களைக் கவர்ந்து சென்று கடலினுள் மறைந்தான்! பிரமன் அதனை மீளவும் பெறும்பொருட்டு மகாவிஷ்ணுவிடம் முறையிட, விஷ்ணு மச்சாவதாரம் (மீன்வடிவம்) கொண்டு கடலினுட்புகுந்து அசுரனைக் கொன்று, அவன் கவர்ந்து சென்ற வேதங்களை மீட்டுத் தந்தார்.

கூர்மாவதாரம்: துருவாச முனிவரின் சாபத்தினால் சுவர்க்கலோகச் செல்வமனைத்தும் திருப்பாற்கடலினுள் புகுந்து மறைந்தன. இந்திரன் முதலான தேவர்கள் இழந்த செல்வத்தைப் பெற விஷ்ணுவிடம் முறையிட்டனர். விஷ்ணுவின் ஆலோசனையின்பேரில் திருப்பாற்கடலைக் கடைய மந்தரமலையை மத்தாகவும், வாசுகியெனும் பாம்பைக் கயிறாகவுங் கொண்டனர். அப்போது மந்தரமலை கடலினுள் அழுந்தாவண்ணம் விஷ்ணு மகா கூர்மாவதாரம் எடுத்து தாங்கினர்.

வராகவதாரம்: இரணியாக்கதன் என்பவன் பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு கடலுட் புகுந்தான். தேவர்களின் வேண்டுகோளினால் மகாவராக உருவெடுத்து இரணியாக்கதனை அழித்து பூமியைத் தன் கொம்பினால் குத்தியெடுத்துக் கொண்டுவந்து முன்போல விரித்தார்.

(தொடரும்)

விருதுநகரில் சுவாமி அவர்கள் பிரசாரம்



யோகாசன ஆலய நிறுவனரும் தலைவருமான உயர்திரு, கோ. மு. சுவாமி அவர்களுடன் விருதுநகர் யோகாசன ஆலய நிர்வாகிகளும் அங்கத்தினர்களும்.

விருதுநகர் பெரிய காளியம்மன் கோவிலில் 5—3—78 காலை 10-மணி யளவில் உயர்திரு. கோ. மு. சுவாமி அவர்கள் யோகாசன ஆலய கிளையைத் தொடங்கிவைத்து "வள்ளித் திருமணம்" சிறப்புரை நிகழ்த்தினர்கள்.

நிர்வாகக்குழுவினர் வருமாறு :—திரு. M. P. A. S. நடராஜன் — செயலாளர் ; திரு. S. S. மனேகர் — உதவிச் செயலாளர் ; திரு. G. தியாகராஜன் — பொருளாளர் ; திருமதி மகமாயி அம்மாள்— மகளிர் பிரிவு ; திரு. K. சங்கரலிங்க நாடார் ; திரு. L. P. P. N. சந்திரஹாசன் ; திரு. பெருமாள் ராஜா — இராஜபாளையம் செயலாளர் ;

இராமநாதபுர மாவட்ட இராஜபாளையம் அருகிலுள்ள முகவூரில் யோகாசன ஆலயக்கிளை 12-2-78ல் தொடங்கப்பட்டது. நிர்வாகிகள் : திரு. பெ. தங்ரகாஜ் — செயலாளர், திரு. T. M, கோபால கிருஷ்ணன் — உதவிச் செயலாளர்,திரு. சா. முத்துராஜ் — பொருளாளர்.

Statement about ownership & other particulars about the newspaper " YOGASANA ALAYA VIJAYAM " Madras

as required to be published under Section 19-D
Sub-Section (b) of the Press and Registration Book Act
From IV (See Rule 8)

1. Place of Publication : Madras.
2. Periodicity of its Pubilication : Monthly.
3. Printer's Name & Address : Sri C. M. Sivaraman, Indian, T. G. S. & Co., Counian Press, 41. Broadway, Madras-600001.
4. Publisher's Name & Address : Sri. N. Grulingam, Indian, " Yogasana Alaya " 9-4, Krishnapuram, Madras - 600094.
5. Editor : Sri. N. Gurulingam, Indian, " Yogasana Alaya " 9-4, Krishnapuram, Madras-600094.
6. Name and Address of individuals who own the news paper and partners or share holders holding more than one percent of the total capital : " Yogasana Alaya " 9-4, Krishnapuram, Madras-600094,

I. N. Gurulingam, hereby declare that the particulars given above are true To the best of my knowledge and belief.

Dated ;
25th March 1978

(Sd.) N. GURULINGAM,
Publisher.

உச்சியுங் காலையும் மாலையும் ஈசனை
நச்சுமின் நச்சி நமவென்று நாமத்தை
விச்சுமின் விச்சி விரிசுடர் மூன்றினும்
நச்சுமின் பேர்நந்தி நாயக னாகுமே.

நாள்தோறும் காலை. உச்சி, மாலை எனும் மூன்று வேளைகளிலும் இறைவனை வழிபடப் பேரன்பு கொள்ளுங்கள்! 'நமசிவய' வெனும் திருமந்திரத்தை உள்ளன்போடு ஓதுங்கள்! சூரியன், சந்திரன், தீயைக்காட்டிலும் பேரொளியுடைய நந்தி நாயகனான சிவபெருமானை வழிபடுங்கள்!

— திருமந்திரம்,

மகரிஷி தாயுமானவர் திருநாள்

அழைப்பு!

அன்புடையீர்!

14—4—78 சித்திரைத்திங்கள் முதல்நாள் மாலை சென்னை வண்ணையம்பதி, திருவொற்றியூர் நெடுஞ் சாலை, எண் 194, நல்லதம்பி சேதுராமன் திருமண மண்டபத்தில், நடைபெறவிருக்கும் விழாவில் யாவரும் கலந்து இன்புறுக! தாயுமானவர் பாடல் மனனப்பரிசில் கலந்துகொள்ள பட்டியல் அளித்தோர் பிற்பகல் 3 மணிக்கே வருகைதந்து பெயரைப் பதிவு செய்துகொள்க!

செயலர்,

யோகாசன ஆலயம்.

Edited & Published by Sri N. Gurulingam, Pracharagar, Yogasana Alayam, 9-4, Krishnapuram, Kodambakkam, Madras-600094. Printed by Sri C. M. Sivaraman, at T. G. Sambandam & Co., Counian Press, 41, Broadway, Madras-6000( ) (March-1978)